Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

TUESDAY, JUNE 25, 2024

செவ்வாய்க்கிழமை ஜூன் 25, 2024 | ஒளி: 09 கதிர்: 280 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE



## தரம் 8–12 வரை சுயக் கற்கை நெறி

இலங்கையின் கல்வித்துறையை மேலும் மேம்படுத்தும் நோக்கில், 8ஆம் தரம் முதல் 12ஆம் தரம் வரை கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு 3 மொழிகளிலும் 'Cambridge Climate Quest' சுயக் கற்கை நெறியை கற்பதற்கான வாய்ப்பு இலவசமாக வழங்கப்பட உள்ளது.

தொடர்ச்சி P2

### குருந்தூர்மலை, வெடுக்குநாறியில்

# "சைவர்கள் வழிபடலாம்"

### யாழில் விதுர விக்கிரமநாயக்க தெரிவிப்பு



■ நிதர்ஷன் வினோத்

குருந்தூர்மலை, வெடுக்குநாறி சிவன் ஆலயங்களில் சைவ மக்கள் சுதந்திரமாக வழிபாடு செய்யலாம் என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க இந்து அமைப்புக்களின் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க, இந்து மதத் தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் தலைமையில், நல்லை ஆதீனத்தில் ஞாயிற்றுக்கிழமை (23) இடம்பெற்ற இச்சந்திப்பில், இந்து மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது என கலாநிதி ஆருதிருமுருகன் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பு தொடர்பில் ஆறுதிருமுருகன் மேலும் தெரிவித்ததாவது,

குருந்தூர்மலை, வெடுக்குநாறி சிவன் ஆலயங்களில் சைவ மக்கள் சுதந்திரமாக வழிபாடு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என வேண்டுகோள் விடப்பட்டது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி புதனன்று விசேட அறிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்வரும் 26ஆம் திகதி நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை மற்றும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்தும் ஜனாதிபதி மக்களுக்குத் தெரியப்படுத்தவுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஜனாதிபதியின் அறிவிப்பின் மூலம் இலங்கை மக்களுக்குப் பல நிவாரணங்கள் கிடைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயலாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

## மைத்திரி இன்றி வழக்கு விசாரணை



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தாக்கல் செய்த வழக்கை ஒருதலைப்பட்சமாக ஆராய்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு மாவட்ட பிரதான நீதவான் சந்துன் விதான, திங்கட்கிழமை (24) தீர்மானித்தார்.

மைத்திரிபால சிறிசேனவுக்காக நீதிமன்றில் ஆஜராக சட்டத்தரணி இல்லாத காரணத்தினால், இந்த வழக்கை ஒருதலைப்பட்சமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## சரத்துக்கு எதிராக ஒழுக்காற்று



ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகாவுக்கு எதிராக இந்த வாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். பொன்சேகாவுக்கு எதிரான நடவடிக்கை குறித்துத் தீர்மானிக்க கட்சியின் செயற்குழு இந்த வாரம் கூடுமென மத்தும பண்டார தெரிவித்தார்.



## வியாழேந்திரன் சத்தியப்பிரமாணம்

வர்த்தக இராஜாங்க அமைச்சரான பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன், வர்த்தக மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சராக ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில், திங்கட்கிழமை (24) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

## ஜனாதிபதி வேட்பாளரின் டொலர்களை அரித்த கரையான்


முன்னாள் ஜனாதிபதி வேட்பாளர் வைத்திருந்த சுமார் 25 கோடி ரூபாய் பெறுமதியான ஐக்கிய அமெரிக்க டொலர்களை கரையான் அரித்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட சுமார் 25 கோடி ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர்களை இவ்வாறு கரையான்களால் அரிக்கப்பட்டுள்ளன என லங்காதீப இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் வேட்பாளர் ஒருவர்

தொடர்ச்சி P2

## பறவைக் காய்ச்சல் பதிவாகி இருந்தால் இறக்குமதி இல்லை



பறவைக் காய்ச்சல் பதிவாகியுள்ள எந்தவொரு நாட்டிலிருந்தும் விலங்குகள் அல்லது விலங்குப் பொருட்களை இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட மாட்டாது என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் வலியுறுத்தியுள்ளது.

அண்மைக்காலமாக பல நாடுகளில் மீண்டும் தலைதூக்கிய பறவைக் காய்ச்சல் ஏ(H5N1) வைரஸ் பரவுவதைத் தடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின்

தொடர்ச்சி P2



## பழ நுகர்வு அதிகரிப்பு

2023ஆம் ஆண்டில் இலங்கையில் பழ நுகர்வு 12.8 மில்லியன் மெட்ரிக் தொன்களாக (1,283,039 மெட்ரிக் தொன்) அதிகரித்துள்ளது என விவசாயத் திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நாட்டின் வருடாந்தப் பழங்களின் தேவை 19.6 மில்லியன் மெட்ரிக் தொன்களாகும். (196,9371 மெட்ரிக் தொன்). 2023ஆம் ஆண்டு பழ உற்பத்தி அதிகரிப்பைப் பார்க்கும் போது வாழை, மா, அன்னாசி, பப்பாளி போன்றவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளது என விவசாயத் திணைக்களம் தெரிவித்துள்ளது.


தொடர்ச்சி P2

## 8,000 அடுக்குமாடிகளுக்கு அறுதி உறுதிப் பத்திரங்கள்

கொழும்பு அடுக்குமாடி குடியிருப்பாளர்களுக்கு உரிமைப் பத்திரம் வழங்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 8,000 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு அறுதி உறுதிப் பத்திரங்களை அடுத்த மாதம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தவிர தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை 1,070 உறுதிப் பத்திரங்களை வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

கடந்த வரவு- செலவுத் திட்டத்தில் கொழும்பு அடுக்குமாடிக் குடியிருப்பு உரிமையாளர்கள் 50,000 பேருக்கு வீட்டு உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.



அதன்படி, இந்த உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட 22 குடியிருப்பு வீடுகளில் 14,559 வீடுகள் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## குருந்தூர்மலை, வெடுக்குநாறியில்

# "சைவர்கள் வழிபடலாம்"

### யாழில் விதுர விக்கிரமநாயக்க தெரிவிப்பு



மேலும், திருக்கோணமலை மற்றும் திருக்கோணேஸ்வரம் ஆலயம் அருகே உள்ள பாதையின் இரு மருங்குகளிலும் அமைக்கப்பட்டு இருக்கின்ற பெட்டிக் கடைகளை அப்புறப்படுத்தி புனிதத் தலத்தின் மேன்மையைப் பேண வழிசெய்ய வேண்டும் என்று எடுத்துரைக்கப்பட்டது.

காங்கேசன் துறை தல்செவன ஹோட்டல் அமைந்துள்ள இடமானது சைவமக்களின் சத்திரம் இருந்த நிலம் என்பதுடன் அந்த நிலம் இதுவரை விடுவிக்கப்படவில்லை என சுட்டிக்காட்டியதுடன், அதனை உடனடியாக விடுவிக்க ஏற்பாடு செய்யுமாறும் அமைச்சரிடம் கோரிக்கை விடப்பட்டது.

இவ்வாறு நாம் விடுத்த கோரிக்கைகளுக்குப் பதிலளித்த அமைச்சர், குருந்தூர்மலை, வெடுக்குநாறி பகுதியில் சுதந்திரமாக வழிபாடு செய்யலாம். எனினும், அப்பகுதி தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது என்றார்.

மேலும் திருக்கோணேஸ்வர பெட்டிக்கடை அகற்றுவது தொடர்பாக மாற்று ஏற்பாடு விரைவில் செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

காங்கேசன்துறை தல்செவன ஹோட்டல் காணி விடயமாக நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். இந்தச் சந்திப்பில், நல்லை ஆதீன சுவாமிகள், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், இந்துகலாசார திணைக்கள பணிப்பாளர் அநுருத்தன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# தரம் 8–12 வரை சுயக் கற்கை நெறி

மேலும், பிராந்திய உயர்கல்வி தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, அவுஸ்திரேலியாவின் பிலின்டர்ஸ் பல்கலைக்கழகம் (Flinders University) இலங்கையில் தனது பல்கலைக்கழக வளாகத்தை ஆரம்பித்து பல்வேறு துறைகளில் இளமாணி, முது மாணி பட்டப்படிப்பு மற்றும் உயர்கல்விப் பிரவேசத்திற்கான வாய்ப்புகளை வழங்க உள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

# மைத்திரி இன்றி வழக்கு விசாரணை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக புதியவரை நியமித்ததை எதிர்த்து இந்த வழக்குத் தாக்கல் செய்திருப்பதுடன், அந்த நியமனத்துக்கு எதிராக நீதிமன்றமும் சிறிசேனாவுக்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு உறுப்பினரும் கலாசார அமைப்பாளருமான முண்டிகு சரச்சந்திரனால் தாக்கல் செய்யப்பட்ட மனுவைப் பரிசீலித்த போதே இந்த இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி வேட்பாளரின் டொலர்களை அரித்த கறையான்

இரகசியமாகப் பாதுகாப்பாகப் பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருந்த டொலர்களே இவ்வாறு அரிக்கப்பட்டுள்ளன என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த முன்னாள் வேட்பாளரின் கோரிக்கையின் பேரில் ஒரு பிரதானியின் தலையீட்டின் மூலம் கரையான் உண்ட டொலர் நோட்டுகளுக்குப் பதிலாக புதிய டொலர் நோட்டுகள் இந்த முன்னாள் வேட்பாளருக்கு சமீபத்தில் வழங்கப்பட்டுள்ளன என்றும் அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் வேட்பாளருக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவைப் பெறுவதற்காக அந்த பிரதானி உதவி செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நீதிமன்ற நடவடிக்கையின் பின்னர் கடந்த ஜனாதிபதி தேர்தலில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்கொடையாளர்களிடமிருந்து முன்னாள் வேட்பாளர் இந்த டொலர்களை பெற்றதாகக் கூறப்படுகிறது.




அதன்படி, டொலர்களை எடுப்பதற்காக, டொலர்கள் வைப்பிலிடப்பட்டுள்ள பணப் பெட்டகத்தைச் சோதனையிட்ட போது கரையான்கள் அவற்றை அழித்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

அதன்பின், அந்த டொலர்களை புதிய நோட்டுகளாக மாற்ற, பிரதானியிடம் வேட்பாளர் உதவி கேட்டதாகக் கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரின் டொலர் சம்பவமே அண்மைய நாட்களாக அரசியல் களத்தில் பல இடங்களில் கேள்விக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பறவைக் காய்ச்சல் பதிவாகி இருந்தால் இறக்குமதி இல்லை



பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமலி கொத்தலாவல தெரிவித்துள்ளார்


பறவைக் காய்ச்சல் பதிவாகும் எந்தவொரு நாட்டிலிருந்தும் இலங்கைக்குள் எந்தவொரு விலங்கின பொருட்களையோ அல்லது விலங்குகளையோ இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அமெரிக்காவில் முதன்முறையாகப் பறவைக் காய்ச்சலால் கால்நடைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது, எனவே இது ஒரு தீவிரமான நிலைமை, இருப்பினும், இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளன. எனவே தேவையற்ற பயத்தை உருவாக்க வேண்டிய அவசியமில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# பழ நுகர்வு அதிகரிப்பு

இது தவிர, 2023ஆம் ஆண்டில் பழங்களின் ஏற்றுமதியும் அதிகரித்துள்ளது. அதன்படி, 38,201 மெட்ரிக் தொன் பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன.

2027ஆம் ஆண்டுக்குள் வாழை உற்பத்தி ஹெக்டேருக்கு 19.5 மெட்ரிக் தொன்னாகவும், மா உற்பத்தியை 9.5 மெட்ரிக் தொன்னாகவும், பப்பாளி 45 மெட்ரிக் தொன்னாகவும், அன்னாசி 14 மெட்ரிக் தொன்னாகவும், ஆரஞ்சு பழத்தை 30 மெட்ரிக் தொன்னாகவும் உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.



இரக இனப்பெருக்கம், கலப்பின இரகப்பெருக்கம், அதிக அடர்த்தி கொண்ட பயிர்ச்செய்கை, ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு, தாவர ஊட்டச் சத்து அறிமுகம், பயிர் சேதத்தைக் குறைத்தல், அறிமுகப்படுத்துதல் போன்ற பல தொழில்நுட்ப நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாயத் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் கலாநிதி கமனி ரணதுங்க தெரிவித்துள்ளார்.

# 8,000 அடுக்குமாடிகளுக்கு அறுதி உறுதிப் பத்திரங்கள்



கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான உரிமைப் பத்திரங்களைத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முதலில் வழங்குகின்றது.

சில விதிகள் மற்றும் விதிமுறைகளின் சிக்கலான சூழ்நிலையால் இந்த வீடுகளின் உரிமை தாமதமானது. ஏற்கெனவே சட்டமா அதிபருடன் கலந்துரையாடி தேவையான ஆலோசனைகளைப் பெற்றுள்ளதாக அமைச்சர் வலியுறுத்தினார்.

'உறுமய' அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குவதற்காக 2024ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இரண்டு பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனையில் தமிழர்கள் வெகுண்டெழுந்தனர்

வி.ரி.சகாதேவராஜா

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக கல்முனை வடக்கு பிரதேச செயலகத்துக்கு எதிராக இடம் பெற்று வரும் சூழ்ச்சிகளையும் நிருவாக அடக்குமுறைகளையும் கண்டித்து பிரதேச மக்கள் 92வது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆனால், திங்கட்கிழமை (24) போராட்ட வடிவத்தை மாற்றி,செயலகத்தை மூடி, வீதிகளை மறித்து ஆக்ரோஷமான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்து முற்றாகச் செயலிழந்தது.பிரதேச செயலகம் இயங்கவில்லை. நகரில் ஒருவித பதட்டம் நிலவியது.

"கல்முனை வடக்கு பிரதேச செயலக உரிமைகளைத் திட்டமிடப்பட்டு ஒடுக்கும் நிருவாக அடக்குமுறைகளை இனியும் பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது, அரசாங்கம் இனியும் வாக்குறுதிகளை வழங்கி காலத்தை இழுத்தடிக்காது உடன் தீர்வை தரும் வரை எமது போராட்டம் தொடரும்" என மக்கள் தெரிவித்துள்ளனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக மக்கள் குவிந்ததுடன், கல்முனை-மட்டக்களப்பு பிரதான வீதியையும் முற்றுகையிட்டுள்ளனர்.

இப்போராட்டத்தில் தமிழ் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் ஸ்ரீதரன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான கவிந்திரன் கோடீஸ்வரன், சீனித்தம்பி யோகேஸ்வரன் பா.அரியநேத்திரன் மற்றும் காரைதீவு முன்னாள் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், வடக்கு பிரதேச செயலக உத்தியோகஸ்தர்கள்,பொதுமக்கள் மற்றும் பொதுச் சமூக அமைப்புகளும் கலந்து கொண்டனர்.

போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு, 90 நாட்களாகியும் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்ரம, ஸ்தலத்துக்கு வருகை தராமை பலத்த விசனத்தை ஏற்படுத்தியது.

களத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவருடன் பேசினார். இருப்பினும் அவர் வருகை தரவில்லை.

இந்நிலையில், உயர் அதிகாரிகளும் அரசாங்கமும் எமக்குத் தீர்வை தர வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவாகச் செயல்பட்டு வந்த இந்த அலுவலகம் 1988களில் தனியான பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

தொடர்ந்து, 1993 இது அமைச்சரவை அங்கீகாரம் பெற்று தனியான பிரதேச செயலகமாகக் கடந்த 30 வருட காலமாக இயங்கி வருகின்றது. இருந்தபோதிலும் ஒருசில அரசியல்வாதிகள் தொடக்கம்



உயர் அதிகாரிகள் வரை பிரதேச செயலகத்தின் மீது நிர்வாக அடக்குமுறைகளைத் தொடர்ச்சியாகப் பிரயோகித்து வருகின்றனர்.

இதனை எதிர்த்து பொது மக்கள் ஆர்ப்பாட்டம் போராட்டத்தை ஆரம்பித்து இருக்கின்றார்கள்.

நிர்வாகம் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்திற்கான அதிகாரங்களைப் பறிப்பது நீதிமன்றை அவமானப்படுத்தும் செயலாகும் என்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் ஸ்ரீதரன் கல்முனையில் தெரிவித்தார்.

இங்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராகப் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆனால், இதுவரை அவர் இந்த பக்கமே தலையைக் காட்டவில்லை. ஒரு கூட்டத்தையும் கூட்டவில்லை.

இது எந்த நாட்டில் உள்ள சட்டம் ? இதுவொரு பச்சைப் பாரபட்சம், நீதி இல்லையா? என்றும் ஸ்ரீதரன் கேள்வியெழுப்பினார்.

மேலும் அவர் கூறியதாவது, "அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் நிரந்தரமாக வாழும் தமிழ் மக்களை நிரந்தரமாகத் துரத்தி அடிப்பதற்கு இன்னொரு சமூகம் கையாளுகின்ற யுக்தி போன்று இதனை நாங்கள் பார்க்கின்றோம்.

முழுக்க முழுக்க தமிழ் மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில் உள்ள நிர்வாக அலகான பிரதேச செயலகம் செயற்படக் கூடாது என்பதில் ஏனிந்த கொலைவெறி?

அந்த பிரதேசத்திற்கான அதிகாரங்களைப் பறிப்பதற்குப் பலரும் முயற்சி செய்கின்றார்கள்.

குறிப்பாக கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செலுத்துகின்ற அதிகாரத்திற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துணை போவதும் நீதிமன்றத்தை அவமதிக்கும் செயல் எனவும் குறிப்பிட்டுள்ளார்.





# “போதைப்பொருளை தடுக்க வாருங்கள்”

சட்டவிரோதமான போதைப்பொருள் பாவனை மலையகத்தில் முற்று முழுதாக தடுக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரும் அதிமேதகு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஹாலி-எல, ரொக்கதென்ன தோட்டத்திற்கு விளையாட்டு மைதானம் ஒன்றினை நிர்மாணிப்பதற்குரிய பணிகள் ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

“மலையகத்தில் என்றும் இல்லாதவாறு பாரியஅபிவிருத்தி வேலைத் திட்டங்கள் பெருந்தோட்டம் எங்கும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இது எதிர்கால மலையக முன்னேற்றத்திற்கு அறிகுறி ஆகும். மேலும் மலையக மாணவர்கள் கல்வியில் நல்ல பெறுபேறுகளை பெற்றுள்ளனர்.மலையக இளைஞர்களும் அனைத்து துறையிலும் தடம் பதித்துள்ளனர் இருப்பினும் மலையகத் தோட்டப் புறங்களை இலக்காகக் கொண்டு சிலர் சட்டவிரோதமான போதைப்பொருள் விற்பனையை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் மலையகத்தில் அத்தகைய கீழ்த்தரமான செயல்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது இது தொடர்பிலான முறைப்பாடுகள் பொதுமக்களிடம் கிடைக்கப்பெற்றால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று நான் பொலிஸ் அதிகாரிகளுக்கு பணிப்புரையும் விடுத்துள்ளேன். மக்களும் இவ்விடயம் தொடர்பில் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்பதோடு, சிறார்களுக்கும் இது பற்றிய தெளிவூட்டல்களை வழங்க வேண்டும்” என குறிப்பிட்டுள்ளார்.

### மிகப்பெரிய ஹெரோயின் தொகையுடன்

## ஆசிரியையும் கணவனும் கைது

தாங்கள் ஆரம்பித்த சட்டவிரோதமான வர்த்தகத்துக்கு ஒருவருடம் நிறைவடைவதை முன்னிட்டு, வருடத் தள்ளுபடி கொடுத்த ஆசிரியையும், அவருடைய கணவனும் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் பிரியர்களுக்குப் போதைப்பொருள் விநியோகம் செய்யத் தயாராக இருந்த பயிற்சி ஆசிரியர் ஒருவரும் அவரது கணவரும் சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் அநுராதபுரம் நகரின் மையப்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர். பொசொன் காலப்பகுதியில், போதைப்பொருளை ஏற்றிச் சென்ற பெண்ணின் மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டதாக அநுராதபுரம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். வாரியபொல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய ஆசிரியை மற்றும் அனுராதபுரம் சுற்றுலா விடுதி ஒன்றில் சமையல்காரரின் உதவியாளராகக் கடமையாற்றும் கேகாலை பிரதேசத்தைச் சேர்ந்த 28 வயதுடைய அவரது கணவர், ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள், போதைப்பொருள் கடத்தலை ஆரம்பித்து ஓராண்டு நிறைவடைந்துள்ள நிலையில், அதன் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில்



விசேட சலுகையாகப் போதைப்பொருள் பொதி ஒன்றிற்கு 500 முதல் 1,000 ரூபாய் வரை தள்ளுபடி வழங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கிடைத்த தகவலின்படி, தம்பதியைக் கைது செய்த போது, பெண்ணிடம் இருந்து 40 கிராம் ஹெரோயினும், அவரது கணவரிடம் இருந்து 80 கிராம் ஹெரோயினும் மீட்கப்பட்டதுடன், பெண்ணின் மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகத்திற்குரிய தம்பதிகள் குருநாகல் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரி ஒருவரிடம் இருந்து பெறப்படும் போதைப்பொருளை மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்காக அனுராதபுரம் நகரம் மற்றும் பூஜா நகரின் வீதிகளுக்கு அருகில் பல்வேறு இடங்களில் மறைத்து வைப்பதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அனுராதபுர மாவட்டத்தில் கைப்பற்றப்பட்ட மிகப்பெரிய ஹெரோய்ன் தொகை இதுவென பொலிஸார் தெரிவிக்கின்றனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## காய்ச்சலுக்கு மருந்தெடுத்த பெண் உயிரிழப்பு


எம்.றொசாந்த்

காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்று, மருந்தை உட்கொண்ட பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் ஞாயிற்றுக்கிழமை(23) இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம்- சாவற்காட்டு பகுதியை சேர்ந்த 63 வயதுடைய விஜயகுமார் குணராணி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்

குறித்த பெண்ணுக்கு கடந்த 20ஆம் திகதி ஏற்பட்ட திடீர் காய்ச்சல் காரணமாக 22ஆம் திகதி யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்று, மருந்தினை பெற்றுக்கொண்டு வீடு திரும்பியுள்ளார்.

பெற்றுக்கொண்ட மருந்தை உட்கொண்ட பின்னர், ஞாயிற்றுக்கிழமை(23) அன்று குறித்த பெண்ணின் உடல்



நிலை மிக மோசமாகி மூச்சுவிட சிரமப்பட்ட நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் உடற்கூற்று பரிசோதனைகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்டு, மேலதிக பரிசோதனை நடவடிக்கைக்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### தாய் சித்திரவதை செய்வதாக கூறி

## பொலிஸில் தஞ்சமடைந்த சிறுவன்

எம்.றொசாந்த்

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் சென்ற சிறுவன் ஒருவன், தனது தாய் மற்றும் தாயின் இரண்டாவது கணவர் தன்னை அடித்து சித்திரவதை செய்வதாகத் தெரிவித்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளான்.

சிறுவன் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், குறித்த சிறுவன் வட இந்தியாவைச் சேர்ந்தவன் எனவும் அவனது தாய் கொழும்பில் கஸீனோவில் வேலை செய்வதாகவும், இங்கு இலங்கையைச் சேர்ந்த நபருடன் தங்கி இருப்பதும் தெரியவந்துள்ளது.

இதற்கமைய, சிறுவன் மன்னார் சென்று அங்கிருந்து கடல் வழியாக இந்தியா செல்வதற்குத் திட்டமிட்டு, கொழும்பில் இருந்து வெளியேறி மன்னார் பேருந்தில் ஏறுவதற்குப் பதிலாக யாழ்ப்பாணம் செல்லும் பேருந்தில் ஏறியமையால், யாழ்ப்பாணத்தைச் சென்றடைந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சென்ற சிறுவனுக்கு எங்கே செல்வது என தெரியாததால், பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளான்.

மேலும், சிறுவனின் தாயை பொலிஸார் யாழ்ப்பாணம் அழைத்து விசாரணை மேற்கொண்ட நிலையில்,சிறுவன் செய்யும் தவறுகளுக்குத் தான் சிறுவனைத் தண்டிப்பதாகத் தாயார் தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து, சிறுவனை சமரசப்படுத்தி, தாயாரையும் எச்சரித்த பொலிஸார், சிறுவனை தாயாருடன் கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### மது விருந்தில் வாய்த்தர்க்கம்:

## இளைஞன் படுகொலை

எம்.றொசாந்த்

நெடுந்தீவில் கடந்த புதன்கிழமை (19) அன்று இடம்பெற்ற மது விருந்தின்போது நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கொலையில் முடிவடைந்துள்ளது.

சம்பவத்தில் நெடுந்தீவு 7ஆம் வட்டார பகுதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞன் தாக்குதலுக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபரும் அவரது நண்பர்களும் மது விருந்தொன்றில் கலந்து கொண்டிருந்த போது, நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கதில், உயிரிழந்த நபர் மற்றுமொருவர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளார். அதில் மற்றைய நபரின் முகத்தில் காயம் ஏற்பட்டுள்ளது.

அப்போது உயிரிழந்த நபரை, அங்கிருந்த இளைஞன் ஒருவன் சம்பவ இடத்தில் இருந்து அழைத்து சென்றதையடுத்து காயமடைந்த நபரை அங்கிருந்த ஏனைய மூன்று நபர்கள் நெடுந்தீவு வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இதன்போது உயிரிழந்த நபர், வைத்தியசாலைக்கு



அழைத்து வந்த நபர்கள் மற்றும் காயங்களுக்கு உள்ளாகிய நபருடன் முரண்பட்ட நிலையில், அவர்களால் தாக்கப்பட்ட உயிரிழந்தார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


இந்நிலையில், நெடுந்தீவு பொலிஸாரால் தாக்குதலுக்குள்ளான நபர் வியாழக்கிழமை (20) அன்று கைது செய்யப்பட்ட நிலையில், ஏனைய மூவர் தலைமறைவாகி இருந்தனர்.

தலைமறைவாகியவர்கள், ஞாயிற்றுக்கிழமை (23) கைது செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த மூவரையும் படகில் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், அவர்களை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள்னர்.



## வருடாந்த அலங்கார உற்சவம்

ஆ.ரமேஸ்



மேல் மாகாணம் களுத்துறை நகரில் பழைமை வாய்ந்த ஆலயமான வேலாபுரம் திருகோவிலின் வருடாந்த அலங்கார உற்சவம் ஜூன் 19ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.


இதனைத் தொடர்ந்து, 20ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு பாற்குடபவனி நடைபெற்று, எம்பெருமானுக்கு சங்காபிஷேகம் நடைப்பெற்றதுடன், மகேஸ்வர பூஜையுடன் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

அன்றைய தினம் மாலை 6.30 மணிக்கு மாம்பழ திருவிழா நடைபெற்று, மறுநாள் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு நித்திய பூஜை, விஷேட வசந்த மண்டப பூஜையுடன் பக்தர்கள் புடைசூழ, மங்கள வாத்தியங்கள் முழங்க, பேண்ட் வாத்திய கலைஞர்களுடன் நடனக் கலைஞர்களின் நடன நிகழ்வுகளுடன் தேர் பவனி களுத்துறை நகரம் சென்று ஆலயத்தை வந்தடைந்தது.

22ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு தீர்த்தோற்சவம் கொடியிறக்கம் செய்யப்பட்டு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.















# நெருக்கடியை கண்டு ஓடிப்போகாது முகங்கொடுங்கள்

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு திறமைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஒருவரிடத்தில் இருக்கும் அதே திறமைகளை மற்றொருவரிடம் எதிர்பார்க்கமுடியாது. அதனால்தான் ஒவ்வொருவரும் வெவ்வேறு துறைகளில் மிளிர்கின்றனர். அவற்றுக்கெல்லாம் முயற்சி முக்கியம்.

முயற்சி செய்யாமல், ஓரிடத்தில் முழுநாளும் அமர்ந்திருந்துவிட்டு, "தான் ராசி இல்லாதவன்", "எனக்கு அதிர்ஷ்டம் இல்லை", "கடவுள் எனக்குக் கொடுத்து வைக்கவில்லை". என்றெல்லாம் புலம்பிக்கொண்டிருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை. பெரிய முயற்சிகளை மேற்கொண்டு இடையிலேயே கைவிடுவதை விடவும், சிறியதாய் முயற்சித்து முழுமையாக நிவர்த்திக்கவேண்டும். அதில்தான் வெற்றி தங்கியிருக்கின்றது.

தோல்வி அனுபவத்தில் பாடத்தைக் கற்றுக்கொடுக்கும்.

ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு துறையைத் தேர்ந்தெடுத்துப் பயணித்துக்கொண்டுதான் இருக்கின்றனர். அவர்கள் பயணிக்கும் பாதையில் எவ்விதமான தடைகளும் ஏற்படவில்லையென்றால், யாரோ ஒருவர் பயணித்த அடியை ஒட்டியே அவர்கள் பயணிக்கின்றனர் என்று கூறுவார்கள். அவ்வாறு பயணிப்பவர்கள் எவ்விதமான சவால்களையும் எதிர்கொள்ளமாட்டார்கள். சிறிய பிரச்சினைகள் ஏற்பட்டாலும் திகைத்து நின்று விடுவர். அடுத்தடுத்து முயற்சிப்பதற்கு அச்சம் கொள்வர்.

எனினும், சிறிய,சிறிய படிக்கட்டுக்களில் ஏறி,ஏறி, கடுமையான சவால்களுக்கு முகங்கொடுத்து முன்னேறிக்கொண்டிருப்பவர்கள், எவ்விதமான சவால்களையும் துணிந்து எதிர்கொள்வர். அவர்களிடத்தில் தோல்வி என்றோர் அச்சமே இருக்காது. துணிவும், விடாமுயற்சியும், தூரநோக்கமும் இருக்கவே செய்யும்.

நமது நாட்டு அரசியலை பொறுத்தவரையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அரசியலில் "பழம் தின்று கொட்டை போட்டவர்" எனக்கூறுவர். அதனால்தான் சவால் மிக்க நேரத்தில், ஜனாதிபதி பதவியை ஏற்றார். ஒவ்வொரு சவால்களையும் வெற்றிகண்டார். அதற்கு அமைச்சரவையும் ஒத்துழைப்பு நல்கியது.

மட்டக்களப்பில் சனிக்கிழமை (22) நடைபெற்ற கூட்டத்தில், "நாட்டின் நெருக்கடியைக் கண்டு ஓடிப்போகும் தலைவர்களிடமிருந்து நாட்டுக்கு நன்மையை எதிர்பார்க்க முடியாது" என தெரிவித்துள்ளார்.

தான் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்காவிட்டால், இன்று நாட்டின் நிலைமையை நினைத்துப் பார்க்க முடியாது என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சவால்களைக் கண்டு அஞ்சாமல் அதற்கு ஈடுகொடுக்குமாறு கோரியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த கூற்று, அரசியல்வாதிகளுக்கு மட்டுமன்றி, சகல துறைகளைச் சார்ந்தவர்களுக்கும் பொருந்தும். குறிப்பாக மாணவர்களுக்கு மிகச் சிறந்த அறிவுரையாகும். பரீட்சைகளில் சித்தியெய்த தவறியவர்கள், வெட்கித் தலைகுணிந்து தங்கள் உயிர்களை மாய்த்துக்கொண்ட சம்பவங்கள் ஏராளம். அவ்வாறானவர்களிடத்தில் துணிவு இல்லையென்பதே எடுத்துக்காட்டாகும்.

மிக முக்கியமான பாடங்களில் தங்களுடைய திறமைகளைக் காண்பிக்கத்தவறிய மாணவர்கள், வெவ்வேறு துறைகளில் பயணித்து உயரிய இடங்களுக்குச் சென்றுள்ளனர். அவர்களிடத்தில், துணிவும், விடா முயற்சியும் உள்ளது என்பதுதான் உண்மையாகும்.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொருவரும் வெவ்வேறான சவால்களுக்கு முகங்கொடுத்துக் கொண்டுதான் இருக்கின்றனர். அதில் வெற்றிக் கொள்ள வேண்டுமாயின், நெருக்கடியைக் கண்டு ஓடிப்போகாது முகங்கொடுக்கவேண்டும். அதிலேயே வெற்றி தங்கியுள்ளது என்பதை நினைவூட்டுகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

சுய பாதுகாப்பு என்பது சுயநலம் அல்ல. தன்னைத்தான் தற்பாதுகாப்புக் கொள்வதாகும். இது ஒவ்வொரு பிரஜைக்குமான உரிமை. எதிர்கால நலனைக் கருதாமல் வாழக்கூடாது. நிகழ்கால உழைப்புக்களே எதிர்கால வரவாகிவிடுகின்றன.

மேலும் கல்வியூடாக, நல்ல பதிவிகளைத் தேடிப் பெறுதல், சேமிப்பு, பிள்ளைகளின் எதிர்காலத்துக்கான வசதிகளை உருவாக்குதல் எல்லாமே ஒருவருடைய குடும்ப நலனுடன் தனது கடமைகளையும் சரிவப் புரிதலுமாகும்.

எங்களை நாம் வளப்படுத்துதல் எவர் நலனையும் உறுதிப்படுத்துதல் ஆகாது. எங்கள் சுய ஆளுமையூடாக கிடைக்கும் நற்பலன்களை ஒத்திவைக்காது உடன் நிறைவேற்றியே ஆகவேண்டும்.

இன்றைய வாழ்க்கைச் செலவு தொடர்ந்தும் உயர்ந்த வண்ணம் இருக்கிறது. எனவே, திட்டமிட்ட வண்ணம் வாழவேண்டியுள்ளது.

கல்வியுடன் இணைந்து உடல்நலன் பேணுவதும் பாரிய போராட்டமாகவுள்ளது. தேகம் நலன் பேணுவதுகூட சுயபாதுகாப்பில் ஒரு ரகம். வாழ்க்கையில், ஸ்திரமாக நிலைநிறுத்துதல் ஒரு சவாலாக இருப்பினும், திடமான எண்ணங்களுடன் தொடர்ந்து சந்தோஷமாக இயங்கினால் எல்லாமே சுலபமாகவே தெரியும். துணிவு, செயலில் தெளிவு எம்மைப் பாதுகாக்கும்.

– பருத்தியூர் பால-வயிரவநாதன்

வடகிழக்கு இணைப்பு பொலிஸ் அதிகாரம்

# முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாட்டை தலைவர்கள் வெளிப்படுத்த வேண்டும்

**தேர்தல் நெருங்கிக் கொண்டிருப்பதால் வழக்கம் போல மீண்டும் இனப் பிரச்சினை தீர்வு, 13ஆவது திருத்த அமுலாக்கம், வடக்கு-கிழக்கு இணைப்பு,சமஷ்டி பற்றி சிறிய, பெரிய அரசியல் தரப்பினர் எல்லோரும் பேசுகின்றார்கள். இது முற்றுமுழுதாக தேர்தல் பிரசார உத்தி என்றாலும், இது குறித்த நிலைப்பாடுகளை ஏனைய சமூகங்களும் முன்வைக்க வேண்டிய தேவை ஒன்று எழுந்துள்ளது. ஆனால், முஸ்லிம் அரசியல்வாதிகள் எந்தவொரு நிலைப்பாட்டையும் தெளிவாக வெளிப்படுத்தாமல் வாழாவிருப்பதைக் காண்கின்றோம்.**

மேலே சொல்லப்பட்ட எல்லா விவகாரங்களும் வடக்கு, கிழக்கு மாகாணத்தை மையமாகக் கொண்டவையாகும். எனவே, கிழக்கில் கிட்டத்தட்ட சரி சமமாகவும் வடக்கில் இரண்டாவது பெரும்பான்மையாகவும் வாழ்கின்ற முஸ்லிம் சமூகத்தின் விருப்பு வெறுப்புக்கள் இதில் உள்வாங்கப்பட வேண்டும். எந்த தீர்வும் பொறிமுறையும் முஸ்லிம்களையும் திருப்திப்படுத்த வேண்டும். இதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லை.

உண்மையில் ஒரு சமூகத்தின் உரிமை, அபிலாஷை, இருப்புடன் தொடர்புபட்ட விடயங்கள் தொடர்பான நிலைப்பாடுகளை நேரிடையாகவே சொல்லியாக வேண்டும். பெயர் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய சில முஸ்லிம் அரசியல்வாதிகளைப் போல இவ்விவகாரங்களை மூடி மறைத்து, சுற்றி வளைத்துப் பேசிக்கொண்டிருக்க முடியாது.

'நாம் ஆட்சிக்கு வந்தால் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவோமம்' என்ற தொனியில் எல்லா பிரதான வேட்பாளர்களும் கருத்துத் தெரிவிப்பதைக் காண்கின்றோம். இதேவேளை, 'வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்து சமஷ்டி அடிப்படையில் தீர்வு வழங்க வேண்டும்' என்று மூத்த தமிழ் தலைவர் இரா.சம்பந்தன் மீண்டும் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார்.

ஆகவே, முஸ்லிம் கட்சித் தலைவர்களான றவூப் ஹக்கீம், றிசாட் பதியுதீன், ஏ.எல்.எம். அதாவுல்லா, ஏனைய சிறுகட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இனிமேலாவது வாயைத் திறக்க வேண்டும்.

குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களை மீள இணைப்பது தொடர்பான முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடு பற்றிய பகிரங்க அறிவிப்பொன்றை செய்யவேண்டும்.

அதேபோல், மாகாண சபை முறைமையைத் தொடர்வது நல்லதே. 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதிலும் பிரச்சினையில்லை. ஆனால், 13இல் உள்ள பொலிஸ்,காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதை முஸ்லிம்கள் ஐயப்பாட்டுடன் பார்க்கின்றனர்.

தமிழ் மக்களுக்கான உரிமைகளை, அபிலாஷைகளைத் தமிழ் அரசியல்வாதிகள் கோருவதை முஸ்லிம்கள் தவறாக நோக்க வேண்டியதில்லை. ஏனெனில், அது அவர்களது கடமையாகும். ஆனால், அதற்காக முஸ்லிம் அரசியல்வாதிகளோ சமூகமோ தமது நிலைப்பாட்டை வெளியிடாமல் இருக்கவும் முடியாது.

சுருக்கமாகக் கூறினால், இணைந்த வடகிழக்கில் வாழ்ந்த முஸ்லிம்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் ஏனைய தமிழ் ஆயுத இயக்கங்களால் பெற்றுக்கொண்ட கசப்பான அனுபவங்களும் தமிழர் அரசியல் முஸ்லிம்களைக் கையாண்ட விதமுமே, முஸ்லிம்கள் வடக்கு, கிழக்கை மீள இணைக்கவும் பொலிஸ் அதிகாரத்தை வழங்கவும் விரும்பாததற்கு முதன்மைக் காரணம் எனலாம்.

அதாவது, அதிகார ரீதியாகவோ அல்லது ஆயுத அடிப்படையிலோ தமிழ் தரப்பின் கைகள் ஓங்கியிருந்த காலத்தை அனுபவ ரீதியாக உணர்ந்தவர்கள் இன்னும் மறந்து விடவில்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்திற்குப் பிறகு இணைக்கப்பட்ட வடக்கும் கிழக்கும் நீதிமன்ற உத்தரவுக்கமைய 2007ஆம் ஆண்டு பிரிக்கப்பட்டது. இப்போது இவ்விரண்டையும் மீள இணைத்தால், அதனை மையப்படுத்தி ஒரு தீர்வை வழங்கினால் தமிழ் மக்களின் ஆட்புல எல்லை அதிகரிக்கும் அவர்களது சனத்தொகை வீதாசாரம் அதிகரிக்கலாம்.

ஆனால், தமிழ் மக்களோடு பிட்டும் தேங்காய்ப்பூவும் போல், ஒன்றுபட்டு வாழ்வதைத் தவிர வடக்கு, கிழக்கு இணைப்பினால் முஸ்லிம்களுக்கு பெரிதாக, குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை என்பதே யதார்த்தமாகும். மாறாகப் பாதிப்புக்களே அதிகம் ஏற்பட வாய்ப்புள்ளது.

மிக முக்கியமாக வடக்கில் தற்போது தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ளது போல், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இந்நிலையில், வடக்குடன் கிழக்கு இணைக்கப்பட்டால் இணைந்த மாகாணத்தில் முஸ்லிம்களின் வீதாசாரம் குறைவடையவே வாய்ப்புள்ளது.

இது பிரதிநிதித்துவ பங்கீடு அதிகார கையளிப்பு, உள்ளிட்ட பல விடயங்களில் முஸ்லிம்களுக்குப் பாதக விளைவை ஏற்படுத்தும்.

வரதராஜ பெருமாளை முதலமைச்சராகக் கொண்ட இணைந்த வடகிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்களும் அங்கம் வகித்த போதும், அக்காலத்திலேயே முஸ்லிம்கள் கடுமையாகத் தமிழ் ஆயுதக் குழுக்களாலும் அரசியல் தரப்புகளாலும் கசப்பான அனுபவங்களைப் பெற்றுக்கொண்டனர் என்பதே வரலாறாகும்.

இது நினைத்துக்கூடப் பார்க்க முடியாத அச்சமிகு காலமாக இன்னும் முஸ்லிம்களின் மனதில் உள்ளது. அந்த நிலைமை மீண்டும் ஏற்படுவதை முஸ்லிம்கள் விரும்பவில்லை.

இருப்பினும், இவ்விரு மாகாணங்களும் பிரிக்கப்பட்ட பிறகு, சில மாற்றங்கள் நிகழ்ந்தன. முஸ்லிம்களுக்கு ஒப்பீட்டளவில் பல அனுகூலங்கள் கிடைத்தன. தமிழர்களுக்கும் சில சாதகமான நிலைமைகள் ஏற்பட்டன. எனவே, மீண்டும் பழைய கையறுநிலைக்கு திரும்பிச் செல்ல கிழக்கு முஸ்லிம்கள் விரும்பவில்லை என்பதே நிதர்சனம்.

இனப் பிரச்சினை தீர்வு என்று வருகின்ற போது, வடக்கு, கிழக்கில் வாழ்கின்ற இன்னுமொரு இனக் குழுமம் என்ற அடிப்படையில் முஸ்லிம்களின் அபிலாஷைகளும் கவனத்திற் கொள்ளப்படவேண்டும் என்பது மறுதலிக்க முடியாது. அது பெரும்பாலும் ஒரு உப தீர்வாக அல்லது தீர்வில் ஒரு பங்காக அமையலாம். இதனைத் தமிழ்த் தலைமைகளே வரலாற்றில் ஏற்றுக்கொண்டார்கள்.

1956ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் நான்காவது மாநாட்டில் முஸ்லிம்களுக்கும் ஒரு சுயாட்சி ஏற்பாடு அவசியம் என்ற விடயம் முன்வைக்கப்பட்டு, அது திருமலைத் தீர்மானத்திலும் அறிவிக்கப்பட்டது.

1961இல் நடைபெற்ற அக் கட்சியின் மாநாட்டில் தந்தை செல்வநாயகம் தமிழர்களைப் போலவே, முஸ்லிம்களுக்கான அதிகார அலகையும் வலியுறுத்தியிருந்தார். அதேபோல் 1977ஆம் ஆண்டில் வெளியான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் முஸ்லிம்களின் பங்கு பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது என்பதும் இவ்விடத்தில் நினைவு கொள்ளத்தக்கது.

இந்தப் பின்னணியில் சமஷ்டி தீர்வு மற்றும் 13இன் முழுமையான அமுலாக்கம் பற்றி முஸ்லிம் தலைவர்கள் தமது சமூகத்தின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும்.

அரசியலமைப்பில் ஒரு ஏற்பாட்டை வழங்கக் கூடாது என்று யாரும் கூற முடியாது. ஆயினும், பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதால் நீண்டகாலத்தில் ஏற்படக் கூடிய விளைவுகள் குறித்து அரசாங்கம் சிந்திக்கின்றது.

யாருடைய கையில் அதிகாரம் அளவுக்கதிகமாக குவிந்து, அது எங்கே கொண்டுபோய்ச் சேர்க்குமோ என்ற பயம் முஸ்லிம் சமூகத்திற்கு உள்ளது.

பொலிஸ் அதிகாரம் எவ்வாறு பகிரப்படும்? அது எவ்வாறு நீதமாகப் பிரயோகிக்கப்படும்? என்ற நிச்சயமற்ற தன்மையே இதற்குக் காரணமாகும். ஆயுதக் குழுக்கள் கடந்த காலத்தில் முஸ்லிம்களுக்குப் பரிசளித்த கசப்பான அனுபவங்கள் அப்பேர்ப்பட்டவை!


இதேபோன்று, வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு இரண்டு இலட்சம் ஹெக்டேயருக்கு குறைவில்லாத காணிப் பிரச்சினைகள் உள்ளன. முஸ்லிம் சமூகத்தின் சனத்தொகை விகிதாசாரத்தின் அரைவாசி அளவுக்குக் கூட, காணிகள் இல்லை.

நிலைமை இவ்வாறிருக்க, இணைந்த வடக்கில் அல்லது பிரிந்த வடக்கு மற்றும் கிழக்கில் யாருடைய அதிகாரம் மேலோங்கும் என்பதைப் பொறுத்துத்தான் காணி அதிகாரம் பயன்படுத்தப்படும். ஆகவே, காணி அதிகாரங்கள் காணிப் பிரச்சினைகள் இன்னும் சிக்கலாக்கி விடக் கூடாது என்ற கரிசனை முஸ்லிம் சமூகத்திற்கு உள்ளது.

இதனைப் பொதுவெளியில் பகிரங்கமாகவும் தெளிவாகவும் சொல்வதற்கு முஸ்லிம் தலைவர்கள், அரசியல்வாதிகளுக்கு இன்னும் தைரியம் பிறக்கவில்லை.

## கடிதங்கள்

### நோயாளர் காவு வண்டி பணியில் இல்லை



முல்லைத்தீவு-ஐயன்கன்குளம் வைத்தியசாலையில் இரு மாதங்களாக நோயாளர் காவு வண்டி சேவையில் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

ஐயன்கன்குளம் வைத்தியசாலையில் இருந்து மல்லாவி ஆதார வைத்தியசாலை 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது.

ஐயன்கன்குளம் வைத்தியசாலையிலிருந்து நோயாளர்களை மல்லாவி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு நோயாளர் காவு வண்டி பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது இரு மாதங்களாக கடும் சிரமங்களைஎதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள கிராமங்களின் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

– நடராசா கிருஸ்ணகுமார்



# எப்போது தீர்வு கிட்டும்?



ச.தனுஷ்கா
ஊடகத்துறை
யாழ்ப்பாண
பல்கலைக்கழகம்

திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலவும் பற்றாக்குறைகளால் வைத்தியசாலைக்கு சமூகமளிக்கும் நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். குறித்த வைத்தியசாலையில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ள, பலரது கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டபோதும், தற்போது வரையிலும் தீர்வுகள் எட்டப்படவில்லை.

கிண்ணியா, மூதூர், தம்பலகாமம், கந்தளாய் பிரதேசங்களில் வைத்தியசாலைகள் இருந்தாலும் கூட, வைத்தியர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், கடும் சிரமத்திற்கு மத்தியில் மக்கள் சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு வருகின்றனர். அவ்வாறு வரும் நோயாளர்களால் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. ஏதேனும் சத்திர சிகிச்சைக்காகத் திகதிகளைப் பெறுவதற்காக வைத்தியசாலையை நாடும் வேளைகளில், தாம் பல தடவைகள் அலைக்கழிக்கப்படுவதாக குற்றஞ்சாட்டுகின்றனர்.

அத்துடன், சரியான கவனிப்பு கிடைப்பதில்லை, சத்திர சிகிச்சை மற்றும் நாளார்ந்த சிகிச்சைகளுக்கு திகதிகளைப் பெறுவதற்காகப் பலமுறை ஏமாற்றங்களுக்கு முகங்கொடுத்ததாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நிலவும் நெருக்கடியான சூழலால் வைத்தியர்கள், தாதியர்கள், சிற்றூழியர்கள் என பல்வேறு தரப்பினர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதால், வைத்தியசாலையின் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்படுகின்றன.

சத்திர சிகிச்சை கூடத்தில் நிலவும் திருத்த வேலைகளின் காரணத்தினால் பலமுறை நோயாளர்களுக்கான சத்திர சிகிச்சைகள் பிற்போடப்பட்டதாகவும் எனினும், மிக அவசரமான சத்திர சிகிச்சைகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும், மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றுமொரு பாரிய பிரச்சினையாகும். இலங்கையின் மருத்துவப் பொருட்களுக்குக் கட்டமைக்கப்பட்ட விலையிடும் பொறிமுறை காணப்படாமையால் அதிகளவான விலையில் மருத்துவ பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றது. ஏழை மக்களது கொள்வனவு சக்திக்கு அப்பாற்பட்டதாக இன்று மருத்துவச் செலவுகள் காணப்படுகிறன. அதிகப் பணம் கொடுத்து மருத்துவச் சிகிச்சையை மேற்கொள்ள முடியாத மக்களே அரச வைத்தியசாலைகளை நாடுகின்றனர்.

எனினும், நிலவும் மருத்துவப் பொருட்களுக்கான தட்டுப்பாடு பல வைத்தியசாலைகளில் தாக்கம் செலுத்துகிறது. இப்பின்னணியில் அரச மருத்துவமனையை நாடும் மக்களே ஏமாற்றப்படுகின்றனர். தற்போது திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையிலும் மருத்துவ பொருட்களின் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில், இது குறித்துப் பல தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மருத்துவப் பொருட்களுக்கான விலையிடல் என்பது பாதுகாப்பு மற்றும் சகாயத் தன்மை போன்றவற்றின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட வேண்டும்.

தரத்தை உறுதி செய்யாமல் மிகவும் குறைந்த விலைகளில் மருத்துவ பொருட்களை விற்பனை செய்வது என்பது நோயாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. போலியான மற்றும் தரம் குறைந்த மருத்துவப் பொருட்களைத் தவிர்ப்பதற்குப் பிரயோக விலை நிர்ணய பொறிமுறையை கொண்டிருப்பது அத்தியாவசியமானதாகும்.



சுகாதார அமைச்சின் தேசிய மருத்துவப் பொருட்கள் தர உறுதிப்படுத்தல் அமைப்பு, முறையான தரப் பரிசோதனைகளை முன்னெடுப்பதில் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளன.

விற்பனையாளர்களால் சமர்ப்பிக்கப்படும் தரவுகளின் அடிப்படையில் மருத்துவப் பொருட்கள் அனுமதிக்கப்படுகின்றன. இதனால் குறைந்த விலைகள் காரணமாகத் தரம் குறைந்த தயாரிப்புக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன. தரமின்மை காரணமாக அரச வைத்தியசாலைகளில் இருந்து பல மருத்துவப் பொருட்கள் மீளப் பெறப்பட்டுள்ளன.

இதனால் பெருமளவு செலவுகளும் ஏற்பட்டுள்ளன என இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தரமான மருத்துவப் பொருட்களைத் தயாரிப்பதில் ஏற்படும் செலவுகள் பற்றிப் பல நோயாளர்கள் உணர்வதில்லை. குறைந்த விலைகளில் அமைந்த மருத்துவ பொருட்களுக்கான கேள்வி இதனால் அதிகரிக்கும் போக்குள்ளது.

WHO அறிக்கையில் வெளியிடப்பட்ட தகவலின் அடிப்படையில், மெக்சிகோ, பாகிஸ்தான் மற்றும் இந்தியா போன்ற நாடுகளில் 30 சதவீதமான மருத்துவப் பொருட்கள் போலியானவை அல்லது தரம் குறைந்தவை. விலை குறைந்த மருத்துவப் பொருட்களால் ஏற்படக்கூடிய சகல பாதிப்புகளில் இருந்தும் பாதுகாத்துக் கொள்வதற்கு இலங்கை அவசியமான சகல படிமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட விலை நிர்ணய பொறிமுறை என்பது அவசரத் தேவையாக அமைந்திருப்பதுடன். உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் விற்பனையாளர்கள் என சகலரையும் உள்வாங்கி இது அமைந்திருக்க வேண்டும். செலவின் பிரகாரம் மாத்திரமின்றி, மருத்துவப் பொருட்களின் பலாபலன் மற்றும் பாதுகாப்பு அடிப்படையிலும் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும். மூலப்பொருட்களின் தரம், பொதியிடல், தரக்கட்டுப்பாடு, களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து போன்ற அனைத்தும் நுகர்வோர் தயாரிப்புகள் பாதுகாப்பாகச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக அமைந்திருப்பது அத்தியாவசியமானதாகும்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் நோயாளர் காவு வண்டிகளின் பற்றாக்குறையால் நோயாளிகள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகி வருவதாகவும் தெரிய வருகின்றது.

பாவனைக்காக 12 நோயாளர் காவு வாகனங்கள் இருந்தும் மூன்று வண்டிகள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகின்றன. வைத்தியசாலைக்கு மிக அவசியமானதாக நோயாளர் காவு வண்டிகள் காணப்படுகிறன. நோயாளிகளை மேலதிக சிகிச்சைகளுக்காக வேறு வைத்தியசாலைகளுக்கு கொண்டு செல்வதில் தாமதங்கள் ஏற்படுவதாகவும் இதனால் நோயாளிகள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் ஊழியர்களுக்கான பற்றாக்குறை அதிகமாக உள்ளது. வைத்திய நிபுணர்கள், தாதியர்கள், சுகாதாரத் தன்னார்வலர்கள் மற்றும் சிற்றூழியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்றது. இப்பின்னணியில் நோயாளர்களுக்கான மருத்துவ சேவையை வழங்குவதில் இன்னல்களை எதிர்கொள்வதாக வைத்தியசாலை தரப்பு கூறுகின்றது.

மேலும், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் போதிய கவனமின்மை, இருதய சத்திர சிகிச்சை தொடர்பான கட்டடத் தொகுதி இன்று வரையும் பூரணப்படுத்தப்படவில்லை. வைத்தியசாலையின் பௌதிக வளங்கள் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன. வைத்தியசாலை விடுதிகளில் அடிப்படை வசதிகள் பூர்த்தியின்றி காணப்படுகிறது. சில விடுதிகளில் குடிநீர் வசதிகள், காற்றாலைகளில் சீரற்ற தன்மை நிலவுகிறது.

வைத்தியசாலையில் உள்ள சிடி (CT) இயந்திரம் மிகப் பழைமையாக காணப்படுவதுடன், எம்.ஆர்.ஐ. (MRI) இயந்திரத் தொகுதி வைத்தியசாலையில் இல்லை போன்ற பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்யாது வைத்தியசாலை இயங்கிக் கொண்டிருக்கின்றது.

வைத்தியர்களுக்கான விடுதி பிரச்சினைக்கான தீர்வுகள் கடந்த கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது. அதில் ஆலோசகர் மருத்துவர்களுக்கான விடுதி பிரச்சினைக்கு மாற்றுப்பாயமாக வைத்தியர்கள் வெளிப்புறத்தில் வாடகைக்குத் தங்கும் சந்தர்ப்பங்களில் அரசு அதற்கான வாடகை கொடுப்பனவை மேற்கொள்ளும் என்ற ஆலோசனையை வழங்கியுள்ளது. எனினும், இது தற்போது வரையிலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. உரிய காலத்தில் நடைமுறைப் படுத்தப்படும் என்று கூறியுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட மக்களுக்கு இன்றியமையாத சேவையை வழங்கும் திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையானது மக்களின் நலனை முதன்மையாகக் கொண்டு, உரிய அதிகாரிகள் கூடிய விரைவில் இப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுப்பதனூடாக மக்களது அசௌகரியங்களை நிவர்த்தி செய்ய முடியும்.





## ‘கோட்’ படத்தின் பட்ஜெட் எவ்வளவு?

தளபதி விஜய் நடித்த ‘கோட்’ படம் செப்டெம்பர் 5ஆம் திகதி வெளியாக இருக்கும் நிலையில், இதுவரை இல்லாத அளவில் மிகப்பெரிய எதிர்பார்ப்பு இந்த படத்திற்கு ஏற்பட்டுள்ளது.

இந்த படத்தின் தயாரிப்பாளர் சுரேஷ் கல்பாத்தி இந்த படத்தின் பட்ஜெட் 300 கோடி இந்திய ரூபாய் என்று கூறியுள்ளார்.

மேலும், தங்களது தயாரிப்புகளில் இந்த படம் தான் மிகப்பெரிய பட்ஜெட்டில் உருவான படம் என்றும் தளபதி விஜய் மிகவும் மதிப்புமிக்க ஸ்டார் என்பதால் இவ்வளவு பெரிய பட்ஜெட்டில் தயாரித்தாலும் இலாபம் வரும் என்று எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு விஜய் நடித்த ‘பிகில்’ திரைப்படம் 300 கோடி ரூபாய் வசூல் செய்த நிலையில், தற்போது அவரது படம் 300 கோடி பட்ஜெட்டில் உருவாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த 300 கோடியில் விஜய் சம்பளம் மட்டும் 200 கோடி என்று கூறப்படும் நிலையில், மீதமுள்ள 100 கோடியில் தான் மற்ற நட்சத்திரங்கள் மற்றும் டெக்னீசியன்கள் சம்பளம் மற்றும் படப்பிடிப்பு செலவு ஆகி உள்ளது என்று கூறப்படுகிறது.

## அஜித் படத்தில் இணைந்த நகைச்சுவை நடிகர்



அஜித் நடித்து வரும் ‘குட் பேட் அக்லி’ என்ற திரைப் படத்தில் பிரபல கொமெடி நடிகர் ஒருவர் முதன்முறையாக அஜித்துடன் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

அஜித் தற்போது மகிழ் திருமேனி இயக்கத்தில் உருவாகி வரும் ‘விடாமுயற்சி’ படத்தின் படப்பிடிப்பில் இருக்கிறார். அஜர்பைஜானில் இந்த படத்தின் படப்பிடிப்பு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் ஐதராபாத்தில் அஜித் நடித்து வரும் இன்னொரு திரைப்படமான ‘குட் பேட் அக்லி’ படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பு நடந்தது. ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருகும் இந்த படப்பிடிப்பில் அஜித்தின் அறிமுக பாடல் மற்றும் அதிரடி ஆக்சன் காட்சிகள் படமாக்கப்பட்டதாகவும் செய்தி வெளியானது.

‘விடாமுயற்சி’ படத்தின் படப்பிடிப்பு முடிந்தவுடன் ஹைதராபாத்தில் மீண்டும் ‘குட் பேட் அக்லி’ படத்தின் அடுத்த கட்ட படப்பிடிப்பு நடைபெற இருப்பதாக தெரிகிறது.

இந்த நிலையில் இந்த படத்தின் தற்போது கொமெடி நடிகர் ரெடின் கிங்ஸ்லி இணைந்துள்ளதாக கூறப்படுகிறது.



## ‘புதிய விளையாட்டு ஆரம்பம்’

லெஜண்ட் சரவணன் நடிப்பில், ஜேடி – ஜெர்ரி இயக்கத்தில் ஹரிஸ் ஜெயராஜ் இசையில் உருவான ‘லெஜன்ட்’ திரைப்படம், கடந்த 2022ஆம் ஆண்டு வெளியாகி வரவேற்பு பெற்றது.

லெஜண்ட் சரவணன் அடுத்த படத்துக்கு தயாராகி வருவதாக கூறப்பட்ட நிலையில், இது தொடர்பில் அவர் தனது சமூக வலைத்தள பக்கத்தில் அதிகாரப்பூர்வ அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

இந்த படத்தை ‘கருடன்’ என்ற வெற்றி திரைப்படத்தை இயக்கிய துரை செந்தில்குமார் இயக்க இருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

‘புதிய விளையாட்டு ஆரம்பம்’ என்ற கேப்ஷனுடன் இந்த அறிவிப்பு வெளியாகி உள்ள நிலையில், இதில் சில லெஜெண்ட் சரவணன்



போட்டோஷூட் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளது.

இந்த புகைப்படங்களை பார்த்த நெட்டிசன்கள் அடுத்த படத்திற்காக ’லெஜன்ட்’ சரவணன் வேற லெவலில் மாறியுள்ளார் என கொமெண்ட் செய்கின்றனர்.

## அட்லி–சல்மான் படத்தில் சூப்பர் ஸ்டார்



அட்லியின் அடுத்த படத்தில் சல்மான் கான் மற்றும் சூப்பர் ஸ்டார் ரஜினியும் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அட்லி இயக்கத்தில் ஷாருக்கான் நடித்த ‘ஜவான்’ திரைப்படம் ரூ.1,000 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்த நிலையில், அட்லியின் அடுத்த படத்தில் அல்லு அர்ஜுன் நடிப்பார் என்று கூறப்பட்டது.


ஆனால், ஒரு சில காரணங்களால் அல்லு அர்ஜுன் நடிக்காத நிலையில் அடுத்ததாக அட்லியின் இயக்கத்தில் சல்மான் கான் நடிக்க இருப்பதாகவும், ஏ.ஆர்.முருகதாஸ் படத்தை முடித்தவுடன் அட்லி படத்தில் அவர் இணைந்து கொள்வார் என்றும் கூறப்பட்டது.

மேலும், இந்த படம் இரண்டு ஹீரோ கதை என்பதால் இந்த படத்தில் நடிக்க சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் உடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக கூறப்படுகின்றது.

எனவே, அவர் இந்த படத்தில் நடிக்க ஒப்புக்கொண்டால் இந்த படம் உலகம் முழுவதும் 2,000 கோடி வசூல் செய்யும் ஒரு மாபெரும் ஹிட் படமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

### வீட்டுக்கு அழைத்து

## விருந்து வைத்த தமன்னா



‘அரண்மனை 4’ திரைப்படத்தில் தமன்னா மற்றும் ராஷி கண்ணா முக்கிய வேடத்தில் நடித்திருந்தனர். இந்த படம் உலகம் முழுவதும் ரூ.100 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்து உள்ளது.

இந்த படத்தில் தமன்னா மற்றும் ராஷி கண்ணா ஆகிய இரண்டு முக்கிய நடிகைகள் நடித்திருந்த நிலையில், இருவருக்கும் இடையே படப்பிடிப்பின் போது சில பிரச்சினைகள் ஏற்பட்டதாக கூறப்பட்டது.

தமன்னா மற்றும் ராஷி கண்ணா இடையே மன வருத்தம் ஏற்பட்டதாக வதந்தி வெளியாகிக் கொண்டிருந்த நிலையில், இந்த வதந்தியை நீக்கும் வகையில் நடிகை தமன்னா, ராஷி கண்ணாவை தனது வீட்டிற்கு அழைத்து விருந்து வைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இது குறித்து தமன்னா கூறிய போது,

“அரண்மனை 4 படத்தின் போது, எனக்கும் ராஷி கண்ணாவுக்கும் எந்தவித பிரச்சினையும் இல்லை, நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள், அதே நேரத்தில், ஆரோக்கியமான போட்டி இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன்” என்றும் கூறியுள்ளார்.

மொஸ்கோ

ரஷ்யாவில் இடம்பெற்ற தாக்குதலில்

# 15 பொலிஸார் உட்பட பலர் பலி

ரஷ்யாவின் வடக்கு காக்கஸ் பிராந்தியத்தில் டகேஸ்டான் மாகாணத்தில் இரு நகரங்களில் தேவாலயம், மற்றும் யூத வழிபாட்டுத் தலங்கள் மற்றும் ஒரு காவல் சோதனைச் சாவடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை துப்பாக்கி ஏந்திய மர்ம நபர்கள் நடத்திய தாக்குதலில், ஒரு மத குரு, 15 பொலிஸார், பொதுமக்கள் உட்பட பலர் உயிரிழந்ததாக அப்பிராந்திய ஆளுநர் செர்கய் மெலிகோவ் தெரிவித்துள்ளார்.

மேலும், டகேஸ்டான் மாகாணத்தில் மிகப் பெரிய நகரான மகாச்கலா மற்றும் கடற்கரை நகரான டெர்பன்ட்டில் நடந்த இத்தாக்குதலை தீவிரவாத சதி என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தத் தாக்குதலில் ஈடுபட்டவர்களில் மகாச்கலாவில் 4 பேரையும், டெர்பன்ட் நகரில் இருவரையும்



பொலிஸார் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

இது குறித்து டெலிகிராம் தளத்தில் கருத்து தெரிவித்த ஆளுநர் மெலிகோவ், “ஞாயிறு மாலை டெர்பன்ட், மகாச்கலாவில் நடந்த தாக்குதல் கண்டனத்துக்குரியது. சமூகத்தை சீர்குலைக்க நடந்த சதி. இதன் பின்னணியில் இருப்பவர்கள் யார், அவர்களின் இலக்கு என்னவென்பது எங்களுக்குத் தெரியும். போர் நம் வீடு வரைக்கும் நீள்வதை நாம் இன்று சந்தித்துள்ளோம். தாக்குதலில் ஈடுபட்ட 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்போது இரு நகரங்களிலும் இயல்பு திரும்பியுள்ளது. இந்த தாக்குதலின் பின்னணியில் ஸ்லீப்பர் செல்களாக செயல்பட்டவர்கள் அடையாளம் காணப்படுவார்கள்.


நடந்த சம்பவத்துக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், 24 மற்றும் 26ஆம் திகதி வரை துக்க நாட்கள் கடைபிடிக்கப்படும். மற்றும் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்படுவதோடு, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்படுகின்றன.

இதுவரை இந்தத் தாக்குதலுக்கு எந்த ஒரு அமைப்பும் வெளிப்படையாக உரிமை கோரவில்லை. ரஷ்ய புலனாய்வுக் குழு இந்தத் தீவிரவாத தாக்குதல் தொடர்பாக விசாரணையைத் தொடங்கியுள்ளது” என்றார்.

ஜேர்மனி

கடும் எதிர்ப்புக்கும் மத்தியில்

## புறாக்களை கொல்ல முடிவு



ஜேர்மனியின் சர்வஜன வாக்கெடுப்புக்குப் பிறகு, ஜேர்மனியில் உள்ள ஒரு சிறிய நகரத்தின் அதிகாரிகள் அனைத்து புறாக்களையும் கொல்வதற்கு முடிவு செய்துள்ளனர்.

அந்தவகையில், ஜேர்மனியின் லிம்பர்க் அன் டெர் லான் நகரம், முழு புறாக்களையும் அழித்தொழிக்க வாக்களித்துள்ளது.

இந்நிலையில், இந்த முடிவுக்கு விலங்கு அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன

மேலும், புறாக்களின் மலம் தான் இந்த முடிவுக்குக் காரணம் என கூறப்படுகின்ற நிலையில், உள்ளூர்வாசிகள் மற்றும் வணிகர்கள் இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில், இந்நகரில் பல ஆண்டுகளாக புறாக்களால் விரக்தியடைந்துள்ளோம் என்று கூறியுள்ளனர்.

பிரித்தானியா

பிரித்தானிய தேர்தலில் பங்குபெறும்

## யாழ். யுவதி?

யாழ்ப்பாணம்-இளவாலையை பூர்வீகமாகக் கொண்ட புலம்பெயர் தமிழரான கிருஷ்ணி ரிஷிகரன் பிரித்தானியாவின் பாராளுமன்ற பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

சட்டன் (Sutton) பகுதியில் வசித்துவரும் இவர், சட்டன் மற்றும் செம் (Sutton and Cheam) ஆகியவற்றிற்கான பாராளுமன்ற உறுப்பினராக போட்டியிடுகிறார்.

தான் புனித பிலோமினா பாடசாலையில் கல்வி கற்றதையும் இந்த சமுதாயத்தில் வளர்ந்து வந்ததையும் நினைவுகளாக மீட்டுப் பார்ப்பதாக கூறுகிறார்.

ஒரு குடும்பமாக தாம் பல போராட்டங்களை எதிர்கொண்டாலும், இங்குள்ள சமூகத்தின் ஆதரவே தான் இன்று இந்த நிலைக்கு வர உதவியதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம், சட்டத் தொழிலைத் தொடர்ந்து, குடும்ப வன்முறையால்



பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கையை மாற்றும் பிரித்தானியாவின் முன்னணித் தொண்டு நிறுவனத்தில் இப்போது பணிபுரியும் கிருஷ்ணி ரிஷிகரன், கவுன்சிலராக இருந்து, மக்கள் எதிர்நோக்கும் வீட்டுப் பிரச்சினைகள் தொடர்பிலும் கவனம் செலுத்துகிறார்.

இந்நிலையில், தாராளவாத ஜனநாயகக் கட்சியுடன் கூட்டணி வைத்த பழைமைவாத அரசாங்கமானது கடந்த 14 ஆண்டுகாலத்தில் பிரித்தானியாவை பலவீனப்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

புதுடெல்லி

“நிலையான ஆட்சியிலேயே

## நாட்டின் வளர்ச்சி தங்கியுள்ளது”

ஏழு கட்டங்களாக நடைபெற்ற மக்களவைத் தேர்தல் முடிவுகள் கடந்த 4ஆம் திகதி வெளியானது. அதில், 543 மக்களவைத் தொகுதிகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 292 இடங்களிலும், இந்தியா கூட்டணி 234 இடங்களிலும் வென்றது.

இத்தகைய சூழலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்ற பின் முதன்முறையாக திங்கட்கிழமை (24) பாராளுமன்றம் கூடிய நிலையில், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 280 எம்.பிக்கள் பதவியேற்றனர்.

இதனையடுத்து, 18ஆவது மக்களவையின் தற்காலிக சபாநாயகராக ஒடிசாவைச் சேர்ந்த பா.ஜ.க. எம்.பி. பர்துஹரி மஹ்தாப்க்கு, ஜனாதிபதி திரௌபதி முர்மு, புதுடெல்லியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

இதுதொடர்பில், செய்தியாளர்களைச் சந்தித்து பேசிய மோடி, “பாராளுமன்ற ஜனநாயகத்தில் இது ஒரு புகழ்பெற்ற நாள். சுதந்திரத்திற்குப் பிறகு முதன்முறையாக நமது சொந்த புதிய பாராளுமன்ற கட்டடத்தில் பதவியேற்பு விழா நடக்கிறது.

இந்தக் குறிப்பிடத்தக்க நாளில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து எம்.பிக்களுக்கும் நான் மனமார்ந்த வரவேற்பையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய நோக்கம், செயல்பாடு ஆகியவற்றுக்காகவே 3வது முறையாக மக்கள் வாய்ப்பளித்தனர். நாட்டுக்கு சேவை செய்யவும், 140 கோடி மக்களின் கனவை நனவாக்கவும் எம்.பி.க்கள் பாடுபட வேண்டும். நாட்டின் வளர்ச்சிக்கு நிலையான ஆட்சி முக்கியம்” என தெரிவித்தார்.

வேலூர்

வீதி விபத்தில் பலியானவரின் சடலத்தை எடுக்க விடாமல்

## பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

வேலூர் மாவட்டம் ஒடுக்கத்தூர் அடுத்த குருவராஜபாளையம் பகுதியைச் சேர்ந்தவர் கிருஷ்ணன் (71). இவர் கடந்த 23ஆம் திகதி மாலை குருவராஜபாளையம் சாலையோரம் நடந்து சென்றபோது இருசக்கர வாகனத்தில் வேகமாக வந்த இளைஞர் ஒருவர் மோதியதில், தூக்கி வீசப்பட்டு சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதனையடுத்து, விபத்தை ஏற்படுத்திய இளைஞர் அங்கிருந்து தப்பியோடியுள்ள நிலையில், தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த வேப்பங்குப்பம் பொலிஸார் உடலை மீட்க முயற்சித்தனர்.

அப்போது, குறித்த பகுதியில் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்பு நிகழ்வதாகவும், கடந்த சில வாரங்களுக்கு முன்பு கூட சாலை ஓரம் நடந்து சென்ற பெண் மீது வாகனம் மோதிதால் உயிரிழந்தார் எனவும் இப்படி அடிக்கடி இந்தப் பகுதியில் விபத்து நடப்பதால், அப்பகுதியில் வேகத்தடை அமைக்க வேண்டும் என பொதுமக்கள் தொடர் கோரிக்கை வைத்தபோதும், அது தற்போது வரை நிறைவேற்றப்படவில்லை எனவும் கூறி, பொதுமக்கள் இறந்த சடலத்தை எடுக்க விடாமல் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, பொதுமக்களுடன் பொலிஸார் நடத்திய நீண்ட நேர பேச்சுவார்த்தைக்கு பின்னர், போராட்டம் கைவிடப்பட்டது. இதனால் சுமார் ஒருமணி நேரம் வரை அங்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்த பொலிஸார், தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.





இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்

# வெளியேறிய மேற்கிந்தியத் தீவுகள்

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரிலிருந்து மேற்கிந்தியத் தீவுகள் வெளியேறியுள்ளது.

அன்டிகுவாவில் திங்கட்கிழமை (24) நடைபெற்ற தென்னாபிரிக்காவுடனான குழு இரண்டு சுப்பர் 8 சுற்றுப் போட்டியில் தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே தொடரிலிருந்து மேற்கிந்தியத் தீவுகள் வெளியேறியுள்ளது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் ஏய்டன் மார்க்ரம், தமதணி முதலில் களத் தடுப்பிலீடுபடுமெனத் தெரிவித்தார். அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், மார்கோ ஜன்சன், மார்க்ரம், தப்ரையாஸ் ஷம்சி (3), கேஷவ் மஹராஜ், ககிஸோ றபாடாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், றொஸ்டன் சேஸ் 52 (42), கைல் மேயர்ஸ் 35 (34), அன்ட்ரே ரஸல் 15 (09), அல்ஸாரி ஜோசப் ஆட்டமிழக்காமல் 11 (07) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 136 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, ரஸலிடம் 2 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து இரண்டு ஓவர்களில் 15 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில், மழை குறுக்கிட்டது.

பின்னர் டக்வேர்த் லூயிஸ் ஸ்டேர்ன் முறையில் 17 ஓவர்களில் 123 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயித்த நிலையில், ஜோசப் (2), சேஸிடம் (3) விக்கெட்டுகளை இழந்தபோதும் ட்ரிஸ்டன் ஸ்டப்ஸின் 29 (27), ஹென்றிச் கிளாசெனின் 22 (10), மார்க்ரமின் 18 (15), குயின்டன் டி கொக்கின் 12 (07) ஓட்டங்களோடு, 16.1 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில், வெற்றி இலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஷம்சி தெரிவானார்.

இருபதுக்கு-20 உலகக் கிண்ணம்

## அரையிறுதியில் இங்கிலாந்து

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து தகுதி பெற்றுள்ளது.

பார்படோஸில் ஞாயிற்றுக்கிழமை (23) நடைபெற்ற ஐக்கிய அமெரிக்காவுடனான குழு இரண்டு சுப்பர் 8 சுற்றுப் போட்டியில் வென்ற இங்கிலாந்து அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இங்கிலாந்து

ஐ.அமெரிக்கா: 115/10 (18.5 ஓவ.) (துடுப்பாட்டம்: நிதிஷ் குமார் 30 (24), கொரே அன்டர்சன் 29 (28), ஹர்மீட் சிங் 21 (17) ஓட்டங்கள்.



பந்துவீச்சு: கிறிஸ் ஜோர்தான் 4/10 [2.5], அடில் ரஷீட் 2/13 [4], லியம் லிவிங்ஸ்டோன் 1/24 [4], ஜொஃப்ரா ஆர்ச்சர் 0/16 [3])

இங்கிலாந்து: 117/0 (9.4 ஓவ.) (துடுப்பாட்டம்: ஜொஸ் பட்லர் ஆ.இ 83 (38), பில் ஸோல்ட் ஆ.இ 25 (21) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: அடில் ரஷீட்





சுப்பர் ஓர்கிட் விளையாட்டு கழக கிரிக்கெட் தொடர்

## சம்பியனான அக்கரைப்பற்று லீ ஸ்டார்

எம்.எப்.றிபாஸ்

பாலமுனை சுப்பர் ஓர்கிட் விளையாட்டுக் கழகத்தின் 37ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, ஏற்பாடு செய்யப்பட்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் அக்கரைப்பற்று லீ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

பாலமுனை ஹிக்மா வித்தியாலய மைதானத்தில் வெள்ளிக்கிழமை (21) நடைபெற்ற இறுதிப் போட்டியில் டீன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்தை வென்றே லீ ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

யூரோ:

## சமநிலையில் ஜேர்மனி சுவிட்ஸர்லாந்து போட்டி

### வெளியேற்றப்பட்ட ஸ்கொட்லாந்து

ஜேர்மனியில் நடைபெற்று வரும் ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடரில், திங்கட்கிழமை(24) நடைபெற்ற ஜேர்மனி, சுவிட்ஸர்லாந்துக்கும் இடையிலான போட்டியானது, 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை, ஹங்கேரியுடனான குழு ஏ போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் தோற்ற ஸ்கொட்லாந்து தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.



சதுரங்க போட்டியில்

## மாணவி சபீஹா மாகாணத்துக்கு தெரிவு

எம்.யூ.எம்.சனூன்

புத்தளம் வலய மட்டத்தில் இடம்பெற்ற சதுரங்க போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையில் தரம் 09 ல் கல்விப்பயிலும் மாணவி மொஹமட் சியாஜ் பாத்திமா சபீஹா, 15 வயதுக்கு உட்பட்ட பிரிவில் இரண்டாம் இடம் பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.



கற்பிட்டி பெரிய குடியிருப்பு, வாழைத் தோட்டம் பகுதியில் வசிக்கும் இவரை பாடசாலையின் நிர்வாகக் குழு சார்பாக பிரதி அதிபர் எஸ்.எப்.சாஜினாஸ் தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 25 ஜூன் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.